21.03.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலீல் | | |
| த/பெ | முகமது அனிப் | | |
| கிராமம் | எடப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 49 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது டி.எடப்பாளையத்தில் கறி கடை வைத்து நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அப்துல் ஜபாரை எனக்கு தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு அவர் இறந்துவிட்டார். அவர் நிலத்திலுள்ள வீட்டில் இறந்துவிட்டார். அவர் இறந்து கிடப்பதாக கேள்விப்பட்டேன். அவர் நிலத்தை பற்றி பேசுவதற்காக என்னையும் மஜீத்தையும் அவர் இறந்த அன்று காலை 11 மணிக்கு அவரது நிலத்திலுள்ள வீட்டிற்கு அழைத்தார். 12.30 மணியளவில் பேசி முடித்துவிட்டு எங்களை அனுப்பிவிட்டார். அதன் பிறகு நாங்கள் வந்துவிட்டோம். அதன் பிறகு அன்று மாலை 6 மணிக்குமேல் அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு ஊர் பொதுமக்களுடன் நானும் அங்கு போனேன். ஊர் பொதுமக்கள் நிறைய பேர் இருந்ததால் என்னால் அங்கு பார்க்க முடியவில்லை. இது குறித்து போலீசார் என்னை 2,3 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள்.

(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 27.06.2018ந் தேதி அன்று தான் அந்த வீட்டில் சமரசம் நடந்ததாகவும், பின்னிட்டு கொலை சம்மந்தமாக செய்தி கேள்விப்பட்டு நான் போய் பார்த்ததாகவும், அப்போது

அப்துல் ஜபார் வெட்டு காயங்களுடன் ரத்த கறையுடன் படுக்கும் கட்டிலுக்கு அருகில் கிடந்தார் என்றும், சுவர்களில் ரத்த கறை இருந்தது என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு இப்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2,3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**<u>5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் அங்கு போவதற்கு முன்பே அங்கு காவல் துறையினர் இருந்தார்கள். அங்கு எங்களை எதுவும் விசாரிக்கவில்லை.

**<u>1,4ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**